கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (மார்ச்/ஏப்ரல் 2015)

# ECOS 4101 Advanced Monetary Theory and Policy

நேரம் : 03 மணித்தியாலங்கள்

11 MAY 2015

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01.(a) பணத்தின் முதல் நிலை தெழிற்பாடுகள் (Primary functions) வழிவந்த தொழிற்பாடுகள் (derivative functions) என்பவற்றை வேறுபடுத்தி விளக்குக.

(04 புள்ளிகள்)

(b) பழம் பொருளியலாளர்கள் பணத்தினை ஒரு நடுநிலைத்தன்மை கொண்ட (Nutral) சாதனமாக ஏன் கருதினார்கள்? காரணங்கூறி விளக்குக.

(04 புள்ளிகள்)

(c) ஒரு நல்ல முறையில் இயங்கும் பொருளாதாரத்தில் வேலையின்மை ஏற்பட முடியுமா? பழம் பொருளியலாளர்களின் ஊழியச் சந்தைச் சமநிலையை அடிப்படையாக வைத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02.(a) நாணய வாதிகளும் கெயின்சிய வாதிகளும் தமது கருத்துக்களில் எவ்வாறு வேறுபட்டு நிற்கின்றனர்?

(04 புள்ளிகள்)

(b) கெயின்சிய வாதிகளிடையே ஒரு புதிய அணிதோற்றம் பெற்றமைக்கான அடிப்படைக் காரணங்களைத் தருக.

(04 புள்ளிகள்)

(c) பணவீக்கம் தோன்றியமைக்கான மூலகாரணங்களை விளக்குவதில் கேள்வித்தூண்டல், மற்றும் செலவுத் தூண்டல் விளக்கங்கள் எந்தளவுக்குப் பொருத்தமானவை என விளக்குக.

(08 புள்ளிகள்)

(d) பணவீக்கத்திற்கான காரணங்களை முன்வைப்பதில் புதிய கெயின்சிய வாதிகளின் கருத்தினை விளக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. "ஒரு நாட்டின் நிதித்துறையின் (Financial Sector) சிறப்பான தொழிற்பாட்டுக்கு சிறந்த நாணயக்கொள்கையொன்று அவசியமாகும்."

(a) ஒரு நாட்டின் பொருளாதார செயற்பாடுகளில் நிதியியல் துறையின் (வங்கி சார்ந்த, வங்கி சாராத) நடிபங்கு (Role) எவ்வாறு காணப்படுகிறது?

(04 புள்ளிகள்)

(b) நாணயக் கொள்கையை வரையறுத்து அதன் பொதுவான இலக்குகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(c) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சிறந்த நாணயக்கொள்கை எவ்வாறு பங்களிக்க முடியும்.

(04 புள்ளிகள்)

(d) குறைவிருத்தி நாடுகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நாணயக்கொள்கை எவ்வாறு உதவ முடியும்?

(08 புள்ளிகள்)

04. (a) நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பு என்பதனால் விளங்கிக்கொள்வது யாது? இது தொடர்பான சர்வதேச உதாரணங்கள் சிலவற்றைத் தருக.

(04 புள்ளிகள்)

(b) நிதியியல் துறையின் ஒருங்கிணைப்புக்களினால் கிடைக்கக்கூடிய நன்மைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(04 புள்ளிகள்)

(c) இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இத்தகைய நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பு எவ்வாறு உதவ முடியும்?

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(a) "சேயி"ன் விதியும் அதன் கோட்பாட்டு முக்கியத்துவமும்.

(b) மொத்த முதலீட்டு, மொத்தச் சேமிப்புச் சமநிலை

(c) வேயின்மையின் இயற்கைவீதம் (Friedman Phelps ) மாதிரி

(d) மையப்பணவீக்கம் (Core Inflation)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*****